**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 13 of 2017

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மாதையன்

Date : 24.09.2024

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் CRPFல் தலைமை காவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் 01.08.1978ல் பணியில் சேர்ந்து 31.05.2013ல் ஓய்வு பெற்றேன். நான் இந்து மதத்தை பின்பற்றுகிறேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் மாணிக்கம், மணிவேல், மகேந்திரன். பெண் வாரிசுகள் யாரும் கிடையாது. தாவா சொத்தை தவிர வேறு இந்து கூட்டுகுடும்ப சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்துக்கள் என்னுடைய அப்பா கண்ணு (எ) மாதையன் தான் பராமரித்து வருகிறார் என்றால் ஆமாம். தற்போது அவருக்கு வயதாகிவிட்டது. இதுவரை இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. 25.02.2004ல் தாவா சொத்துக்கள் நேரடியாக கிரயம் செய்யப்பட்டது. அதற்கு முன்பாக விலை எதுவும் பேசவில்லை. 25.02.2004ல் நானும். எனது அம்மாவும் கிரயம் வாங்கிய போது நான் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். நான் அப்போது இந்திய துணை ராணுவ கட்டுப்பாட்டில் நேரடி கண்பார்வையில் பணிபுரிந்து வந்தேன். நான் சொத்தை வாங்குவதற்கு முன்பாக என் உயர் அதிகாரிகளிடம் முன் அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக நான் முன் அனுமதி வாங்கியுள்ளதாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் என்னுடைய தாவாவிலும் முன் அனுமதி வாங்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) சென்ட் அடிப்படையில் விலை பேசப்பட்டதா என்றால் ஏக்கர் அடிப்படையில் விலை பேசப்பட்டது. மொத்த கிரய தொகை ரூ.3,70,000/-. முன்பணம் எதுவும் கொடுக்கவில்லை. கிரயம் செய்த அன்று முழு பணமும் கொடுக்கப்பட்டு கிரையம் செய்து கொள்ளப்பட்டது. 25.02.2004 அன்று காலை சுமார் 10.30, 10.45க்குள் விலை பேசப்பட்டு உடனே பதிவு அலுவலகம் சென்றோம். காரிமங்கலம் பதிவு அலுவலகத்திற்கு வெளியே விலை பேசினோம். ஒரு மணி நேரம் விலை பேசினோம். எப்போது விலை பேசி முடிக்கப்பட்டது என்று நேரம் தற்போது சரியாக நியாபகம் இல்லை. என் அம்மாவிற்கு நான், எனது தம்பிகள் எனது சம்பள பணத்தை கொடுப்போம். என் அப்பா வண்டி, மாடு, பால் வியாபாரம் செய்து வந்தார்.அந்த பணத்தை எனது அம்மாவிடம் கொடுப்பார். அந்த பணத்தை எனது அம்மா சேமித்து வைப்பார். தாவா சொத்தை வாங்கும் போது நாங்கள் எல்லோரும் கூட்டாக தான் இருந்தோம். நானும் எனது சகோதரர்கள் கொடுத்த பணத்தையும், எனது அப்பா கொடுத்த பணத்தையும் வைத்து தான் எனது அம்மா தாவா சொத்தை வாங்குவதற்காக கிரைய பணத்தை கொடுத்தார் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் தாவா சொத்தை வாங்குவதற்கு பணம் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை.

2) என் அம்மா ஓ.எஸ் 83/2017 என்ற வழக்கை போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடியாகி விட்டது என்றால் எனது அம்மா இறந்து விட்டதால் தள்ளுபடியாகி விட்டது. என அம்மாவிடம் 2016 கடைசியில் 2017 ஆரம்பத்தில் நான் பாகம் பிரித்து தர சொல்லி கேட்டேன். என் அம்மா,

அப்பா என்னுடைய பாதுகாப்பில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் பணி நிமித்தமாக வெளியூரில் இருந்தேன். அவர்கள் இருவரும் எங்கள் ஊரில் இருந்தார்கள். என் அப்பா தற்போது என்னுடைய பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அப்பா என் கடைசி தம்பி மகேந்திரனுடன் பெங்களூரில் இருக்கிறார். என் அம்மா நான் வசிக்கும் முகவரியான விளாங்காமுடி பஞ்சாயத்து போச்சம்பள்ளி வட்டத்தில் குடியிருப்பதாக இரண்டு வழக்குகளிலும் குறிப்பிபடப்பட்டுள்ளது என்றால் அப்போது எனது அம்மா அந்த முகவரியில் இருந்தார். மலிக்கல் கிராமத்தில் ஒரு வீடு தான் எங்கள் குடும்பத்திற்கு உள்ளது. இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது 2ம் பிரதிவாதி மாணிக்கம் போலிஸ் குவாட்டர்சில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

3) 2004ல் பட்டா மாற்றம் செய்ய நான் மனு கொடுத்தேன். 2004லிருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை எனது அம்மா பெயரிலும், என் பெயரிலும் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. வா.சா.ஆ.2 கனினி பட்டாவிற்கு முன்பாக கூட்டுரிமையை காட்டுவதற்காக நான் வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் 22.09.2016 தேதியில் மனு தாக்கல் செய்து சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 3.3.2017ல் மதியம் 3.30 மணிக்கு கனினி மூலமாக பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ1ன் அசல் கிரய பத்திரம் எனது அம்மாவிடம் மல்லிக்கல் வீட்டில் இருந்தது. எனது அம்மா உயிருடன் இருக்கும் போதே அனைத்து சொத்து ஆவணங்களையும் 2ம்

பிரதிவாதி எடுத்து சென்று விட்டார். இது சம்பந்தமாக 2017, 2018ல் எஸ்பியிடமும், ஆட்சியரிடமும் எனது அப்பா மனு கொடுத்துள்ளார். அந்த விவரங்களை எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். ஆனால் அவர் எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளாரா என்று தெரியவில்லை.

*4) 16.03.2017ல் ஒஎஸ் 13/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் அம்மாவிடம் கிரய பத்திரத்தின் அசல் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கிரைய பத்திரங்கள் காணாமல் போய்விட்டதாக சொன்னேன். ஆனால் அதுபோல் வழக்கில் சொல்லப்படவில்லை. எனக்கு தெரிந்து எனது அம்மா அவருடைய மகன் மாணிக்கம் அசல் கிரய பத்திரம் சென்று விட்டதாக புகார் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரிந்து இல்லை. என் மனைவி கீதா இந்து கூட்டு குடும்ப சொத்தின் ஒரு பகுதி குறித்து எனது அப்பா கிரய பத்திரம் எழுதி கொடுத்தது சம்பந்தமாக கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு தாககல் செய்தார் என்றால் ஆமாம்.*

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*